சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஹாக்கி விளையாடுவதற்கென்று அங்குள்ள மாவட்ட விளையாட்டுக் குழுக்களின் சார்பில் தனியாக இடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. எந்தெந்தப்பள்ளிகள் விரும்புகின்றனவோ அவை அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் சொல்லியிருக்கின்றோம். இப்படி பொதுவான இடங்களை உருவாக்கி ஒரு நான்கு, ஐந்து பள்ளிகள் பயன்படுத்திக் கொள்ளுகின்ற அளவுக்கு செய்ய முடியும் என்று சொன்னால், இவ்வாறு பெரிய நகரங்களில் எல்லாம் செய்யலாம் என்ற கருத்தையும் நாங்கள் வெளியிட்டிருக்கின்றோம்.

Free Eye Camp.

*263 Q.—Thiru V. THANGAPANDIAN : Will the Hon. the **Minister** for Health be pleased to state the number of persons benefited by the 'Free Eye Camp' in Tamil Nadu till 31—1—1975, District-wise?

இலவசக் கண் சிகிச்சை முகாம்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

தமிழ்நாட்டில் 31—1—1975-ஆம் நாள் வரை, இலவசக் கண் சிகிச்சை மூலம் உதவி பெற்றவர்கள் மாவட்ட வாரியாக எத்தனை பேர்?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தமிழ்நாட்டில் 31—1—1975 ஆம் நாள் வரை மொத்தம் 8,05,959 பேர்கள் இலவசக் கண் சிகிச்சை மூலம் பல்வேறு வகையான உதவியைப் பெற்றுள்ளார்கள். அதன் விவரம் :—

சென்னை	11,422
செங்கற்பட்டு	41,610
வடஆற்காடு	52,792
தென்னாற்காடு	51,374
தர்மபுரி	23,851
தஞ்சாவூர்	1,01,356
திருச்சிராப்பள்ளி	92,701
சேலம்	63,185
கோயம்புத்தூர்	91,773
நீலகிரி	25,109
மதுரை	1,06,090
ராமநாதபுரம்	78,102
திருநெல்வேலி	49,876
கன்னியாகுமரி	12,403
புதுக்கோட்டை	4,323

திரு. வே. தங்கப்பாண்டியன்: இந்த சிகிச்சை முகாம் நடுத்தர மக்களுக்கும், ஏழை மக்களுக்கும் மிகச் சிறப்பாக பயன் அளிக்கிறது. ஆனால் இந்த முகாமிலிருந்து சிகிச்சை பெற்றுத் திரும்பியபின்பு சிகிச்சை பெற்றவர்களுக்கு மாதாந்திரமாகவோ அல்லது மூன்று மாதங்களுக்கோ தொடர்ந்து ஃபாலோ அப்—செக் அப் இருந்தால் நன்றாக இருக்கும். அவர்களுக்கு பின்னால் செக்-அப் இல்லை என்ற ஒரு குறை பாடு இருக்கின்றது. ஆகவே, இதை நிவர்த்தி செய்ய ஏதாவது திட்டம் அரசு வைத்திருக்கின்றதா என்றும், அவ்வாறு செய்யும் நேர்வில் இந்தத் தொழிலில் ஏற்கெனவே ஈடுபட்ட அந்த டாக்டர்களுக்கு தொடர்ந்து இந்தப் பணி கொடுக்கப்படுமா என்றும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இதிலே பெரும்பான்மையானவர்கள் புறநோயாளிகளாக அவ்வப்போது கண்ணுக்கு ஏற்படுகின்ற சில தொல்லைகளுக்கு சிகிச்சை பெற்றுக்கொள்கின்றார்கள். 89,115 பேர் புறை அறுவை சிகிச்சை பெற்றவர்கள். அந்த 89 ஆயிரம் பேரில் ஏறத்தாழ 88 ஆயிரம் பேருக்கு எந்தவிதமான குறைபாடும் ஏற்பட வாய்ப்பு கிடையாது. சிகிச்சை முறையாகச் செய்யப்படுமானால், அதற்குப் பின்னர் அவர்களுக்குப் போடப்படுகின்ற கண்ணாடி மூலமாகப் பார்வை கிடைக்கிறது. அத்தனை பேருக்கும் சிகிச்சையளித்த பின்னாலே திரும்பவும் அவர்களுக்கு மறுபரிசீலனை செய்து சிகிச்சை செய்து கொண்டிருப்பது என்பது, இது கேம்ப் ஹாஸ்பிட்டல் என்ற முறையில் நடைபெறுகின்ற காரணத்தால் இயலாத ஒன்றாகும். ஆனால் இவ்வாறு சிகிச்சை செய்யப்பட்டபின்பு யாருக்கேனும் குறைகள் இருந்து, அவர்கள் மாவட்ட மருத்துவ மனைக்கு வருவார்களேயானால், அங்கே அவர்களுக்குத் தேவையான சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சட்டமன்றம் LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(பிற்பகல் 4–30).

திரு. வி. வெங்கா: இந்தக் கண்ணொளி வழங்கும் முகாம்களுக்கு பொது மக்களிடமிருந்து இதுவரையிலே வசூல் செய்யப்பட்ட தொகை எவ்வளவு? அரசு தன் பங்காகச் செலவு செய்த தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இப்போது அதற்கான விடை கைவசம் இல்லை. ஆனால் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் அளவுக்கு இரண்டு மூன்று ஆண்டுகள் தொடர்ந்து அந்த நிதி வசூலாகியிருக்கின்றது. ஆனால் அரசாங்கத்தின் சார்பாகவும் நிதி ஒதுக்கவேண்டிய நிலைமையிருக்கின்றது என்ற அளவுக்கு எனக்கு நினைவுக்கு வருகிறது.